TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8069095

1. District : மாவட்டம் Salem
   PS: காவல்நிலையம் Vigilance & Anti Corruption, Salem
   Year: ஆண்டு
   FIR No.: மு.த.அ. எண் 7/AC/2024
   Date: நாள் 26.09.2024

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended in 2018 — Sections பிரிவுகள்: 7 (a)
   (ii) Act சட்டம்: BNSS, 2023 — Sections பிரிவுகள்: 106
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல்
   Date to : நாள் வரை 25.09.2024
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல்
   Time to : நேரம் வரை Prior to 12.05 Hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26.09.2024
   Time : நேரம் 04.00 Hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
   Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Collection of Sources

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் RTO office, Mettur, Salem District Approximately 50 km - west
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் N. Narendran
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S. Nagarajan
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
   (d) Nationality : நாட்டினம்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Inspector of Police
   (g) Address : முகவரி Vigilance and Anti Corruption, Salem

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) Tmt. V. Meenakumari, Motor Vehicle Inspector, Mettur, Salem District.
   2) Tr. Jayaprakesh, Bonton Company Staff, Office of RTO, Mettur, Salem District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

GCP-240-34(Type-2) 90,000 Cps.-2T.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate sheet enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

N. Narendran (signature)

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

N. Narendran (signature)

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
26.09.2024
08.00 Hrs.

Name: பெயர் N. Narendran
Rank: நிலை Inspector of police, VTAC, Salem ..........No. எண் ..........

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**சேலம் மாவட்ட ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 07/AC/2024, ச/பி 7(a) of the Prevention of Corruption Act r/w 106 BNSS 2023 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.**

25.09.2024ம் தேதி சேலம் மாவட்டம் மேட்டூர் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.வி.மீனாகுமாரி அவர்கள் வருடாந்திர புதுப்பிப்பு செய்யவரும் வாகன உரிமையாளர்கள், புதிய வாகனங்கள் பதிவுசெய்யவரும் உரிமையாளர்கள் மற்றும் இதர பணிகளுக்காக வரும் நபர்களிடமிருந்து நேரடியாகவும், தனிநபர்கள் மூலமாகவும் கையூட்டாக பணம் பெற்றுக்கொண்டு மேற்படி பணிகளை செய்துகொடுப்பதாகவும் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அரசு சாட்சிகள் திரு.K.P.தியாகராஜன், தேர்தல் துணை வட்டாட்சியர், மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம் மற்றும் திருமதி. P. பாப்பாத்தி, வருவாய் ஆய்வாளர், ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகம், சேலம் மாவட்டம் ஆகியோர் முன்னிலையில் 25.09.2024ம் தேதி பகல் 12.05 மணி முதல் இரவு 22.30 மணி வரை சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஒரு திடீர் தணிக்கை மேற்கொண்டதில், மேட்டூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும் அரசு பணிகளுக்காக எந்த தொகையும் அந்த அலுவலகத்தில் ரொக்கமாக வசூலிக்கப்படுவதில்லை என தெரியவந்தது. பிறகு, அந்த அலுவலகத்தை தணிக்கை செய்தபோது, வட்டார போக்குவரத்து அலுவலக வாயிற் கதவு அருகில் கட்டை மற்றும் இரும்பினாலான டேபிள் ஒன்று காணப்பட்டது, அந்த டேபிளில் நான்கு ரேக்குகள் இருந்தது அதனை சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்தபோது, மேலிருந்து கீழாக கடைசியாக இருந்த ரேக்கில் இரண்டு கற்றையாக ரூபாய் நோட்டுகள் காணப்பட்டது. அதனை சாட்சிகள் உதவியுடன் எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் 500 ரூபாய் நோட்டுக்கள் 100 எண்ணிக்கையில் ஒரு கற்றையாகவும், 500 ரூபாய் நோட்டுக்கள் 10 எண்ணிக்கையில் ஒரு கற்றையாகவும் ஆக மொத்தம் ரூ.55,000/- இருந்தது. அந்த தொகை மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.V.மீனாகுமாரி அவர்களுக்கு கையூட்டாக கொடுக்கப்பட்ட பணம் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதால், அந்த தொகையை அரசு சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. மேலும், மேட்டூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தினுள் செயல்படும் Bonton நிறுவன பணியாளர் அறையில்

திரு.ஜெயபிரகாஸ் என்பவர் அமர்ந்திருந்த பின்பக்க கேபினின் தென்மேற்கு மூலையில் தரையின் கீழே ஒரு கற்றையாக பணம் காணப்பட்டது. அதனை சாட்சிகள் உதவியுடன் எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் 500 ரூபாய் நோட்டுக்கள் 20 எண்ணிக்கையில் ஒரு கற்றையாக மொத்தம் ரூ.10,000/- இருந்தது. அந்த தொகை Bonton நிறுவன பணியாளர் திரு.A.ஜெயபிரகாஸ் அவர்கள் முறையற்ற வகையில் கையூட்டாக பெற்ற பணம் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதால், அந்த தொகை அரசு சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. மேலும், வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் பின்புறம் தென் கிழக்கு மூலையில் தெற்கு வாயிற் கதவு கொண்ட கழிவறைக்கு முன்பாக கற்றையாக ரூபாய் நோட்டுகள் காணப்பட்டது. அதனை சாட்சிகள் உதவியுடன் எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் 500 ரூபாய் நோட்டுக்கள் 100 எண்ணிக்கை (500x100 = 50,000) ஒரு கற்றையாகவும், 500 ரூபாய் நோட்டுக்கள் 20 எண்ணிக்கை (500x20 = 10,000), 200 ரூபாய் நோட்டுக்கள் 2 எண்ணிக்கை (200x2 = 400), 100 ரூபாய் நோட்டுக்கள் 52 எண்ணிக்கை (100x52 = 5,200), ஆக மொத்தம் ரூ. 15,600/- ஒரு கற்றையாகவும், இரண்டு கற்றையும் சேர்த்து மொத்தம் ரூபாய் 65,600/- இருந்தது. அந்த தொகை மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.V.மீனாகுமாரி அவர்களுக்கு கையூட்டாக கொடுக்கப்பட்ட பணம் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதால், அந்த தொகை அரசு சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. மேற்படி விவரங்களிலிருந்து பொது ஊழியரான திருமதி.V.மீனாகுமாரி, மோட்டார் வாகன ஆய்வாளர், மேட்டூர் அவர்களும், Bonton நிறுவன பணியாளர் திரு.A.ஜெயபிரகாஸ் அவர்களும் தங்களுடைய முறையான அலுவல் பணிகளை மேற்கொள்வதற்காக ரூபாய் 1,30,600/- ஐ கையூட்டாக பெற்று மறைத்துவைத்துள்ளார் என தெரியவருகிறது. எனவே, திருமதி.V.மீனாகுமாரி, மோட்டார் வாகன ஆய்வாளர், மேட்டூர், சேலம் மாவட்டம் மற்றும் Bonton நிறுவன பணியாளர் திரு.A.ஜெயபிரகாஸ் ஆகியோர் மீது சட்டப்பிரிவுகள் 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 r/w 106 Bharathiya NagariK Suraksha Sanhita, 2023 ன்படி இன்று 26.09.2024 ஆம் தேதி காலை 4.00 மணிக்கு முதல் தகவலறிக்கை பதிவு செய்து, முதல் தகவலறிக்கையின் அசலை

கனம் ஊழல்தடுப்புச்சட்ட வழக்குகள் விசாரணைக்கான தனிநீதிமன்றம், சேலத்திற்கும், இதர நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் சமர்ப்பிக்கப்பட்டது.

N. Narendran 26.09.2024
INSPECTOR OF POLICE
VIGILANCE AND ANTI-CORRUPTION,
SALEM-7.